Phone : +91-44-24984474
+91-44-24986886
+91-44-24986887
+91-44-24660948
Mobile: +91-9176330054

Sinus and Nose Hospital

சைனஸ் மற்றும் மூக்கு மருத்துவமனை

# மூக்கு நோய் வைத்தியத்தில் ஒரு புரட்சி!

# எண்டோஸ்கோப் அறுவை சிகிச்சை!

## இப்போது கம்ப்யூட்டர் துணையுடன் துல்லிய அறுவை சிகிச்சை!

### ஆசிரியர் பற்றி சிறு குறிப்பு

டாக்டர். பி.துளசிதாஸ், காது, மூக்கு, தொண்டை மற்றும் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை நிபுணர். இவர் இத்துறையில் 25 வருட அனுபவம் பெற்றவர். இவர் எண்டோஸ்கோப் அறுவை சிகிச்சை முறையை முதன் முதலில் இந்தியாவிற்கு அறிமுகப்படுத்திய ஐவரில் ஒருவராகவும், இன்று இத்துறையில் சிறந்த வல்லுனராக விளங்குகிறார். சிட்னியில் 1997ம் ஆண்டு மார்ச் மாதம் உலக காது, மூக்கு, தொண்டை மருத்துவர்கள் காங்கிரஸ் மாநாட்டில் “Endoscopic Tear Sign & Dacryocystorhinostomy” என்ற இவரது ஒளிநாடா வெண்கல பதக்கத்தினை வென்றது இந்தியாவில் உள்ள பல காது, மூக்கு, தொண்டை மருத்துவர்களை இந்த எண்டோஸ்கோபிக் அறுவை சிகிச்சையில் தேர்ச்சி பெற பல எண்ணற்ற பயிற்சி வகுப்புகளை நடத்தியுள்ளார்.

இவர் இதுபோன்ற நிகரற்ற சாதனைகளை புரிந்திருக்கிறார். சென்னையில் முதல் எண்டோஸ்கோப் அறுவை சிகிச்சை சென்னையில் 1990ம் ஆண்டு சென்னை காளியப்பா மருத்துவமனையில் இவரால் செய்யப்பட்டட்து இந்தியாவில் முதன்முதலில் 1992ம் ஆண்டு எண்டோஸ்கோப் அறுவை சிகிச்சை மூலம் பார்வை கோளாறுகள் இவரால் சரி செய்யப்பட்டது தென்னிந்தியாவிலேயே முதன் முதலில் 1994ம் ஆண்டு மூளையில் இருந்து உண்டாகும் கபால நீர் (CSF) கசிவை எண்டோஸ்கோப் அறுவை சிகிச்சை மூலம் அடைத்த பெருமை இவரைச் சாரும். 2000ம் ஆண்டு, வாஷிங்டனில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கில் இவரது கபால நீர் கசிவு ஒளிநாடா (VIDEO) தங்கப்பதக்கம் பெற்றது. மேலும் சென்னையில் முதன் முதலாக 1995ம் ஆண்டு பிட்யூட்ரி சுரப்பியில் உருவான கட்டியை எண்டோஸ்கோப் அறுவை சிகிச்சை மூலம் நீக்கி குணப்படுத்தினார். இந்தியாவிலேயே கண்களில் உண்டாகும் கண்ணீர் கசிவினை நிறுத்த மிக அதிகமான எண்டோஸ்கோப் அறுவை சிகிச்சைகளை செய்துள்ளார். இவருடைய அறுவை சிகிச்சைகளில் 70% எண்டோஸ்கோப் பங்கு வகிக்கிறது.

#35A, Santhome High Road,
Santhome, Chennai-600004,
Tamil Nadu, India.

**Dr. P. துளசி தாஸ்**
MBBS DLO, MS (ENT), MCh (Plastic surgery) ENT and Plastic surgeon

sinusandnose35@gmail.com, sandnhospital@gmail.com, thulasisinusandnose@gmail.com
www.sinusandnose.com

Sinus and Nose Hospital
சைனஸ் மற்றும் மூக்கு மருத்துவமனை

Phone : +91-44-24984474
+91-44-24986886
+91-44-24986887
+91-44-24660948
Mobile: +91-9176330054

# மூக்கு நோய் வைத்தியத்தில் ஒரு புரட்சி

## எண்டோஸ்கோப் அறுவை சிகிச்சை



Dr. P. துளசி தாஸ்., MBBS DLO, MS (ENT), MCh (Plastic surgery) ENT and Plastic surgeon

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் மனிதன் வான்வெளியில் பறந்து சந்திர மண்டலத்தில் கால் வைத்த இந்த நவீன யுகத்திலும் நோயில்லாத வாழ்வுதான் சிறந்த செல்வம். ஆனால் உண்மையில் நோயில்லாத மனிதனே இல்லை. நோய் என்று வந்துவிட்டால் அதைப்பற்றி சிறிதேனும் அறிந்திருக்க வேண்டுமல்லவா? நம் உடல் உறுப்புகளில் முக்கியமான உறுப்பு மூக்கு, நாம் உயிர் வாழ தேவையான காற்றை நாம் பெறுவது மூக்கின் வழியாகும். உணவின்றி கூட சிறிது நேரம் இருந்து விடலாம். ஆனால் காற்றினை சுவாசிக்காமல் ஒரு வினாடி கூட இருக்க முடியாது. சைனஸ் நோய் மற்றும் மூக்கு சதைகள் மூக்கு வழியாக சுவாசிப்பதற்கு தடங்கல் ஏற்படுத்துகிறது. இது நாள் வரை இந்த நோய்களுக்கு கையாளப்பட்டு வந்த அறுவை சிகிச்சை முறைகள் அவ்வளவு பயனுள்ளதாகவும் திருப்திகரமாகவும் அமையவில்லை இதனால்தான் சைனஸ் நோயையும். மூக்கு சதைகளையும் குணப்படுத்த முடியாது என்ற ஒரு கருத்து பொது மக்களிடையே நிலவி வருகிறது.

இதுநாள் வரை முக்கினுள் பார்க்க வேண்டும் என்றால். ENT டாக்டர்கள் ஒரு Head Mirror அல்லது Head Light–ஐ பயன்படுத்தினார்கள்.

#35A, Santhome High Road,
Santhome, Chennai-600004,
Tamil Nadu, India.

Dr. P. துளசி தாஸ்
MBBS DLO, MS (ENT), MCh (Plastic surgery) ENT and Plastic surgeon

sinusandnose35@gmail.com, sandnhospital@gmail.com, thulasisinusandnose@gmail.com
www.sinusandnose.com

# Sinus and Nose Hospital
சைனஸ் மற்றும் மூக்கு மருத்துவமனை

Phone : +91-44-24984474
+91-44-24986886
+91-44-24986887
+91-44-24660948
Mobile: +91-9176330054


## இதுநாள் வரை மூக்கினுள் பரிசோதனை செய்வதற்கு ஒரு Head Light அல்லது Head Mirror உபயோகப்படுத்தப்பட்டது.

அதிலிருந்து வரும் வெளிச்சத்தை மூக்கு துவாரம் வழியாக செலுத்தி அதே துவாரம் வழியாக பார்க்கவும் வேண்டியிருந்தது. மூக்கின் உள் பகுதி மிகப்பெரியதாகவும் மூக்குத்துவாரம் மிக சிறியதாகவும் இருப்பதால் மூக்கின் உள்ள பகுதிகளை சரிவர பார்க்க முடியாமல் இருந்தது. இதனால் அறுவை சிகிச்சைகளையும் முழுமையாக செய்ய முடியாத நிலை இருந்து வந்தது.



## வெளியிலிருந்து ஒளியை பாய்ச்சி பரிசோதனை செய்யும் போது மூக்கின் உள் பகுதிகளை சரிவர பார்க்க முடிவதில்லை.



எண்டோஸ்கோப் கருவியின் மூலம் மூக்கின் உள்ள பகுதிகளை மிக தெளிவாக பரிசோதனை செய்து நோயின் தன்மைகளைத துல்லியமாகக் கண்டறிய முடியும். எண்டோஸ்கோப் (எண்டோ என்றால் உள்ளே, ஸ்கோப் என்றால் பார்க்கும் கருவி) என்றால் உள் நோக்கும் கருவி என்று பொருள். எண்டோஸ்கோப் கருவி ஒரு குழாய் மாத்ரி இருக்கும். அதன் முனையில் வெளிச்சம் வரும். எண்டோஸ்கோப்பிலிருந்து வரும் வெளிச்சத்தையும். அது தரும் தெளிவான காட்சியையும் பயன்படுத்தி பரிசோதனை செய்பவர்க்கு மூக்கினுள்ள எல்லா பகுதிகளையும் மிக துல்லியமாக பார்க்க முடிகிறது.


#35A, Santhome High Road,
Santhome, Chennai-600004,
Tamil Nadu, India.

**Dr. P. துளசி தாஸ்**

MBBS DLO, MS (ENT), MCh (Plastic surgery) ENT and Plastic surgeon


sinusandnose35@gmail.com, sandnhospital@gmail.com, thulasisinusandnose@gmail.com

www.sinusandnose.com

Phone : +91-44-24984474
+91-44-24986886
+91-44-24986887
+91-44-24660948
Mobile: +91-9176330054


## எண்டோஸ்கோப் மூலம் பரிசோதனை செய்யும் மூக்கின் உள் பகுதிகளை துல்லியமாக பார்க்க முடிகிறது.

இதே கருவியை உபயோகித்து மூக்கினுள் அறுவை சிகிச்சை செய்யும் போது சதைகளையும் கட்டிகளையும் முழுமையாக வேரோடு எடுத்துவிட முடிகிறது. இதனால் சதைகள் மீண்டும் வளருவதில்லை. மீண்டும் மீண்டும் அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிர்ப்பந்தமும் இல்லை மூக்கு நோய் சிகிச்சையிலும் எண்டோஸ்கோப் கருவி ஒரு புரட்சியை செய்துவிட்டது என்று கருதலாம்.




## எண்டோஸ்கோப் அறுவை சிகிச்சை செய்யும் முறை



சைனஸ் (SINUS) என்றால் என்ன என்பது பற்றி பொது மக்களிடையே பல விதமான கருத்துக்கள் இருக்கின்றன. உண்மையில் சைனஸ் என்றால் எலும்பு அறை என்று பொருள். மூக்கின் பக்கவாட்டிலும், கண்களுக்கு கீழும், இரு கண்களுக்கு நடுவிலும் எலும்பு அறைகள் அமைந்துள்ளன.


#35A, Santhome High Road,
Santhome, Chennai-600004,
Tamil Nadu, India.


**Dr. P. துளசி தாஸ்**

MBBS DLO, MS (ENT), MCh (Plastic surgery) ENT and Plastic surgeon

sinusandnose35@gmail.com, sandnhospital@gmail.com, thulasisinusandnose@gmail.com


www.sinusandnose.com

Phone : +91-44-24984474
+91-44-24986886
+91-44-24986887
+91-44-24660948
Mobile: +91-9176330054




இந்த எலும்பு அறைகளுக்குள் காற்று இருக்கும். இருக்க வேண்டும் உடலில் அதிக எடையுள்ள பாகமான தலையின் எடையை குறைப்பதற்காக இயற்கையிலேயே அமைந்துள்ள அமைப்பு அது இந்த எலும்பு அறைகள் எல்லாமே மூக்கினுள் சிறு துவாரங்கள் வழியாக திறக்கின்றன. சுவாசத்தோடு காற்று எலும்பு அறைக்குள் இத்துவாரங்கள் வழியாக சென்று வருகிறது.

இந்த முக்கினைச் சுற்றியுள்ள நான்கு அறைகளுக்குள் நம்முடைய பேச்சு ஒலி சென்று அதிர்வை ஏற்படுத்துகிறது. சிலரின் குரல் கம்பீரமாக இருப்பதற்கு இந்த எலும்பு அறைகள் நன்றாக அமைந்திருப்பதுதான காரணம். மூக்கில் இருப்பது போன்று இந்த எலும்பு அறைக்குள்ளும் சளி சவ்வு இருக்கிறது.



சளி சவ்வில் உள்ள சுரப்பிகளில் இருந்து வரக்கூடிய பிசுபிசுப்பான திரவத்தில் (MUCOUS) நாம் சுவாசிக்கும் காற்றில் உள்ள தூசுக்கள் ஒட்டிக் கொள்கிறது. இதனால் சுத்தமான காற்று உட்செல்கிறது. பின்னர் இந்த சளி தானாக தொண்டை வழியே இறங்கி விடுகிறது.

ஆனால் ஜலதோஷத்தை ஏற்படுத்தும் நுண்கிருமிகளால் தாக்கப்படும் போது சளி சவ்வில் இருந்து நிறைய சளி புறப்படுகிறது. இந்த சளி எலும்பு அறைகளில் இருந்து மூக்கிற்கு வந்து விட்டால் பிரச்சினை இல்லை. ஆனால் சிலருக்கு எலும்பு அறையின் துவாரத்தில் சதை வளருவதாலோ அல்லது சதை சவ்வு வீக்கத்தினாலோ, மூக்குத் தண்டில் வளைவு இருப்பதாலோ, எலும்பு துவார்த்தில் அடைப்பு ஏற்பட்டு சளி வெளியே வர முடியாத நிலைக்குத் தான் சைனஸ் நோய் என்று பெயர்.

#35A, Santhome High Road,
Santhome, Chennai-600004,
Tamil Nadu, India.

Dr. P. துளசி தாஸ்
MBBS DLO, MS (ENT), MCh (Plastic surgery) ENT and Plastic surgeon

sinusandnose35@gmail.com, sandnhospital@gmail.com, thulasisinusandnose@gmail.com
www.sinusandnose.com

Sinus and Nose Hospital


சைனஸ் மற்றும் மூக்கு மருத்துவமனை

Phone: +91-44-24984474
+91-44-24986886
+91-44-24986887
+91-44-24660948
Mobile: +91-9176330054


இதனால் மூக்கடைப்பு, கட்டியாக சளி வருதல், தலை பாரம், தலை வலி, வாசனை தெரியாமல் இருத்தல், மூக்கில் நீர் வருதல் ஆகிய பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

சைனஸ் தொந்தரவு எல்லோருக்கும் ஏற்பட்டாலும் சிலருக்கு சளி ஒரு வாரத்தில் வெளியே வந்து பிரச்சினைத் தீர்ந்துவிடும். இல்லாவிடில் மருந்து சாப்பிட்டால் ஒரு வாரத்தில் குணம் கிடைக்கும். ஆனால் சிலருக்கு என்ன மருந்து சாப்பிட்டாலும் துவார அடைப்பு விலகாது. மாதக்கணக்கில் பிரச்சினை நீண்டு கொண்டே இருக்கும். இதற்கு முன்பு எல்லாம் எலும்பு அறைக்குள் ஒரு ஊசியை செலுத்தி அதன் வழியே தண்ணீரை அடித்து சளியை வெளியே எடுத்து வந்தார்கள். இதற்கு பங்சர் (PUNCTURE) என்று பெயர். இது ஒரு தற்காலிக நிவாரணம் தான். எலும்பு அறையின் துவாரத்தில் ஏற்பட்ட அடைப்பு அவ்வாறே இருப்பதால் சளி மீண்டும் சேர்ந்து விடுகிறது. உபாதையும் கூடவே வந்து விடுகிறது சைனஸ் நோய்க்கு முகத்தை கிழித்து சளியை எடுப்பதற்காகச் செய்யப்பட்ட பழைய அறுவை சிகிச்சை முறைகள் பயனற்றவையாக இருந்தன. இதற்குக் காரணம், இந்த கிசிச்சை முறைகளில், எலும்பு அறைகளில் துவார அடைப்பு அகற்றப்படாததுதான் மேலும் ஒவ்வொரு எலும்பு அறைக்கும் தனித்தனியே அறுவை சிகிச்சைகள் செய்ய வேண்டியிருந்தது.

எண்டோஸ்கோப் கருவியை மூக்கினுள் செலுத்தி அதன் முனையிலிருந்து வரும் வெளிச்சத்தால் மூக்கின் எல்லா




பகுதிகளையும் பரிசோதனை செய்து எலும்பு அறையில் துவார அடைப்பின் காரணத்தைக் கண்டுபிடித்து அகற்றி விட முடியும் ஒரே அறுவைச் சிகிச்சையில் எல்லா எலும்பு துவாரங்களையும் பெரிதுப்படுத்தி சளியையும் எடுத்துவிட முடியும் துவாரங்கள் பெரிதுபடுத்தப்படுவதால் சளி மீண்டும் தேங்காது. சைனஸ்நோய் குணமடைகிறது. எண்டோஸ்கோப் முறையை உபயோகப்படுத்தும்போது முகத்தை கிழிக்க வேண்டிய தேவை இல்லை இயற்கையாய் அமைந்திருக்கும் மூக்கு துவாரம் வழியாக இந்த அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது.

சிலருக்கு எலும்பு அறையின் துவாரம் அடைபட்டு அதன் உள்ளே சளி வருடக்கணக்கில் தேங்கி நின்று, எலும்பு அறை விரிவடைந்து கண்களை வெளிப்புறமாக தள்ளிவிடுகிறது. இதற்கும் எண்டோஸ்கோப் அறுவை சிகிச்சை முறை நிவாரணம் அளித்து கண்களை பழைய நிலைக்கு கொண்டு வருகிறது.


**Dr. P. துளசி தாஸ்**

MBBS DLO, MS (ENT), MCh (Plastic surgery) ENT and Plastic surgeon

#35A, Santhome High Road,
Santhome, Chennai-600004,
Tamil Nadu, India.

sinusandnose35@gmail.com, sandnhospital@gmail.com, thulasisinusandnose@gmail.com

www.sinusandnose.com

Sinus and Nose Hospital
சைனஸ் மற்றும் மூக்கு மருத்துவமனை

Phone : +91-44-24984474
+91-44-24986886
+91-44-24986887
+91-44-24660948
Mobile: +91-9176330054




**சளி நிறைந்து எலும்பு அறை விரிவடைந்து கண்ணை வெளியே தள்ளிவிட்டதுதான் இவரது இந்த தோற்றத்திற்கு காரணம்.**

**எண்டோஸ்கோப் அறுவை சிகிச்சைக்குப்பின் அவரது தோற்றம் பழைய நிலைக்குத் திரும்பியிருக்கிறது. முகத்தைக் கிழிக்காமல் மூக்கு துவாரம் வழியாக செய்யப்படுவதால் முகத்தில் வடுவோ, அறுவை சிகிச்சை செய்யப்பட்டதற்கான அறிகுறிகளோ இல்லை.**




கண்ணுக்கும் மூக்கிற்கும் உள்ள இடைவெளி மிகச் சிறியது. எலும்பு அறைகளில் தேங்கி இருக்கும் சளி அருகில் உள்ள கண்ணுக்கு சில நேரங்களில் பரவும் அபாயம் உள்ளது. இது கண்ணில் வீக்கம் பார்வைக் குறைவு ஆகிய பிரச்சினைகளை ஏற்படுத்தி விடும். சளியை கவனிக்காமல் விட்டுவிட்டால் அது மூளைவரைகூட பரவி விடும் அபாயம் உண்டு.

#35A, Santhome High Road,
Santhome, Chennai-600004,
Tamil Nadu, India.

**Dr. P. துளசி தாஸ்**
MBBS DLO, MS (ENT), MCh (Plastic surgery) ENT and Plastic surgeon

sinusandnose35@gmail.com, sandnhospital@gmail.com, thulasisinusandnose@gmail.com
www.sinusandnose.com

Sinus and Nose Hospital
சைனஸ் மற்றும் மூக்கு மருத்துவமனை

Phone : +91-44-24984474
+91-44-24986886
+91-44-24986887
+91-44-24660948
Mobile: +91-9176330054

எலும்பு அறைகளிலிருந்து சளி கண்ணுக்குள் பரவி கண்ணில் வீக்கம் ஏற்பட்டுள்ளது. இதை வைத்தியம் செய்வதில் தாமதம் ஏற்பட்டால் கண் பார்வை போய்விடும். மேலும் சீழ் மூளைக்கு பரவும் அபாயமும் உண்டு.



எண்டோஸ்கோப் அறுவை சிகிச்சைக்குப் பின் கண் சகஜ நிலைக்கு திரும்பியது.



எண்டோஸ்கோப் மூலம் சளி அகற்றப்படுவதால் இந்த பிரச்சினைக்கும் தீர்வு காணலம்.

சிலருக்கு மூக்கில் சதை (POLYP) வளர்ந்து முழுவதும் சதை நிறைந்து விடுவதால் மூக்கு வழியே மூச்சுவிட முடியாத நிலை இருக்கும். வாசனை தெரிவதில்லை. தலை பாரம், தலைவலி இருந்து கொண்டிருக்கும்.

#35A, Santhome High Road,
Santhome, Chennai-600004,
Tamil Nadu, India.

**Dr. P. துளசி தாஸ்**
MBBS DLO, MS (ENT), MCh (Plastic surgery) ENT and Plastic surgeon

sinusandnose35@gmail.com, sandnhospital@gmail.com, thulasisinusandnose@gmail.com
www.sinusandnose.com

Phone: +91-44-24984474
+91-44-24986886
+91-44-24986887
+91-44-24660948
Mobile: +91-9176330054



இரண்டு மூக்கும் சதை நிறைந்து முழுமையாக அடைபட்டிருக்கின்றன. ஏற்கனவே பலமுறை பழைய முறைப்படி அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது.

இதற்கு முன் மூக்கினுள் லைட் அடித்து கண்ணுக்குத் தெரிந்த பகுதியில் உள்ள சதையை மட்டும் தான் எடுத்து வந்தார்கள்.

## மூக்கின் பின் பகுதியில் மூக்குச்சதை (POLYPS)

ஆனால் சதையை உருவாக்கும் வேர் எடுக்கப்படுவதில்லை இதனால் மீண்டும் சதை வளர்ந்து மீண்டும் அறுவை சிகிச்சை தேவையாக இருந்தது. மூக்கு அடைப்பைப் போக்கிக் கொள்வதற்காக நோயாளிகள் பல முறை அறுவை சிகிச்சை செய்து கொள்ள வேண்டியிருந்தது.

எண்டோஸ்கோப்பின் மூலம், இப்போது வேரை கண்டுபிடித்து சதையை முற்றிலுமாக எடுத்து விடுவதால் மீண்டும் சதை வளருவதில்லை. மூக்கு அடைப்பு விலகுகிறது வாசனையும் தெரிகிறது.



Phone: +91-44-24984474
+91-44-24986886
+91-44-24986887
+91-44-24660948
Mobile: +91-9176330054



மூக்குனுள் சதை நிறைந்து, மூக்கு விரிந்து, கண்கள் முன் தள்ளிய நிலை.

எண்டோஸ்கோப் மூலம் அறுவை சிகிச்சை செய்தபின் கண்கள் பழைய நிலைக்குத் திரும்பிய தோற்றம். விரிவடைந்த மூக்கும் சகஜ நிலைக்குத் திரும்பியது.



மேலும் மூக்கில் அதிக அளவு அடைத்து இருக்கும் சதை கண்களை அழுத்துவதால் கண்கள் வெளியே தள்ளப்படுகிறது எண்டோஸ்கோபி மூலம் சதையை எடுப்பதால் கண்கள் முந்தைய நிலைக்குத் திரும்பிவிடுகிறது.

எண்டோஸ்கோப் கருவி மூலம் மூக்கினுள் ஏற்படும் புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடித்து சிகிச்சை செய்யலாம் இதே போல் எலும்பு அறைக்குள் வளரும் புற்று நோயையும் ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடித்து சிகிச்சையை ஆரம்பிப்பதற்கு இந்த எண்டோஸ்கோப் கருவி உதவுகிறது. இதைத் தவிர எண்டோஸ்கோப் மூலம் மூக்கு வழியே மூளை சம்பந்தப்பட்ட நோய்களுக்கும் அறுவை சிகிச்சை செய்ய முடியும்.

கபாலநீர் (CEREBRO SPINAL FLUID) மூக்கு வழியே வந்து சிலருக்கு தொந்தரவு தரலாம்.

Sinus and Nose Hospital
சைனஸ் மற்றும் மூக்கு மருத்துவமனை

Phone : +91-44-24984474
+91-44-24986886
+91-44-24986887
+91-44-24660948
Mobile: +91-9176330054

## தண்ணீர் போன்று தெளிவான நீர் மூக்கிலிலுள்ள குனியும்போது வடிந்தால் அது கபால நீராக இருக்கலாம்.

இது மூளைக்கும், மூக்கிற்கும் இடையில் அமைந்திருக்கும் எலும்பில் ஒரு துவாரம் ஏற்படுவதால் உண்டாகும் கசிவாகு. இந்த துவாரத்தை அடைக்காமல் விட்டு விட்டால் மூக்கிலிருந்து மூளைக்கு கிருமிகள் பரவி மூளைக் காய்ச்சல் உண்டாகும் அபாயம் உள்ளது அதனால் இதனை அடைத்தாக வேண்டும். இது நாள் வரை நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் இதற்கு மண்டை ஒட்டை பிளந்து அறுவை சிகிச்சை செய்து வந்தனர். இது நீண்ட நாள் மருத்துவ மனையில் தங்க வேண்டிய பெரிய அறுவை சிகிச்சை ஆகும். ஆனால் எண்டோஸ்கோப் அறுவை சிகிச்சை முறையில் மிக எளிதாக மூக்கு வழியாக கபால நீர்க் கசிவு எந்த இடத்திலிருந்து வருகிறது என்று கண்டுபிடித்து அதனை அடைத்துவிடலாம். இது இந்த கபால நீர்க்கசிவு வைத்தியத்தில் ஒரு பெரும் புரச்சியாகும்.



தலையின் நடுப்பகுதியில் உள்ள பிட்யூட்டரி (PITUITARY) என்ற நாளமில்லா சுரப்பியின்ற கட்டுப்பாட்டில் தான் தைராய்டு (THYROID) சுரப்பி மற்றும் உடல் வளர்ச்சி, பெண்களுக்கு பால் சுரப்பது ஆகியவை உள்ளது. பிட்யூட்டரி சுரப்பியில் கட்டி ஏற்படும்போது மேற்கூறிய செயல்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. இந்த கட்டியையும் அகற்றுவதற்கு மண்டை ஒட்டை திறந்துதான் அறுவை சிகிச்சை செய்து வந்தனர். இதையும் எண்டோஸ்கோப் அறுவை சிகிச்சை மூலம் மூக்கு வழியே மிக எளிதாகவும், முழுமையாகவும் அகற்றிவிடலாம். நோயாளி பல நாள் மருத்துவ மனையில் தங்கி அவதிப்பட வேண்டியதில்லை.

கண்ணின் கருவிழியும் அதைச் சார்ந்திருக்கும் சவ்வும் ஈரப்பசையுடன் இருப்பது அவசியமாகிறது. கண்ணீர் சுரப்பியிலிருந்து (LACRIMAL GLAND) வெளியாகும் கண்ணீர், கண்ணுறுப்புகளை ஈரப்பசையுடன் வைத்திருக்கிறது இந்த கண்ணீர் கண்ணுக்கு ஈரப்பசை அளித்த பிறகு கண்ணுக்கும், மூக்கிற்கும் நடுவில் அமைந்துள்ள கண்ணீர் பையில் நிறைந்து மூக்கிற்கு செல்லும் குழாய் வழியாக மூக்கிற்குள் சென்று தொண்டையில் இறங்கி விடுகிறது. சிலருக்கு இந்த குழாயில் அடைப்பு ஏற்பட்டு அதனால் கண்ணிலிருந்து நீர் வடிதல், சீழ் வடிதல் போன்ற உபாதைகளுக்கு ஆளாகிறார்கள். சில நேரங்களில் கண்ணுக்கும் மூக்கிற்கும் நடுவில் கட்டி ஏற்பட்டு அது உடைந்து சீழ் வெளியாகி தொந்தரவு தரும்.

#35A, Santhome High Road,
Santhome, Chennai-600004,
Tamil Nadu, India.

**Dr. P. துளசி தாஸ்**
MBBS DLO, MS (ENT), MCh (Plastic surgery) ENT and Plastic surgeon

sinusandnose35@gmail.com, sandnhospital@gmail.com, thulasisinusandnose@gmail.com
www.sinusandnose.com

# Sinus and Nose Hospital

## சைனஸ் மற்றும் மூக்கு மருத்துவமனை

Phone : +91-44-24984474
+91-44-24986886
+91-44-24986887
+91-44-24660948
Mobile: +91-9176330054



## கட்டி உடையும் நிலையில்

இந்த நோய்க்கு கடந்த 100 ஆண்டுகளாக மூக்கிற்கு பக்கத்தில் முகத்தைக் கிழித்து அறுவைச் சிகிச்சை செய்து வந்தனர். இப்போது மூக்கு வழியாக எண்டோஸ்கோப் கருவி மூலம் ஒரே அறுவை சிகிச்சையில் சரி செய்து விட முடியும். முகத்தை கிழிக்க வெண்டியதில்லை. முகத்தில் வடுக்கள் ஏற்படுவதுமில்லை. மேலும் கண்ணின் கருவிழியின் பின் பகுதியில் சில கட்டிகள் ஏற்படுவதுண்டு. அவற்றின் தன்மையை அறியவும், அவற்றை அகற்றவும், முகத்தை கிழித்து அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிர்பந்தம் இருந்து. இப்போது மூக்கு வழியாக எண்டோஸ்கோப் கருவி மூலம் இக்கட்டிகளின் தன்மையை அறியவும், அவற்றை அகற்றவும் முடிகிறது.

## எண்டோஸ்கோப் அறுவைச் சிகிச்சைக்கு பின்



சிலருக்கு தைராய்டு சுரப்பி (THYROID GLAND) அதிக அளவு தைராய்ட் ஹார்மோங்களை சுரப்பதால் இரு கண்களும் வெளியே தள்ளப்படுகிறது. இதற்கு GRAVES'DISEASE என்று பெயர். கண்களை சரியாக மூட முடியாமல் போவதால் பார்வையற்றுப் போகும் அபாயம் உண்டு.



தைராய்டு சுரப்பி அதிகமாக சுரப்பதால் கண்கள் முன் தள்ளப்பட்டு, கண்களை மூட முடியாத நிலை. இதனால் கருவிழி காயமடைந்து பார்வையற்றுப் போகும் அபாயம் உண்டு.

#35A, Santhome High Road,
Santhome, Chennai-600004,
Tamil Nadu, India.

**Dr. P. துளசி தாஸ்**

MBBS DLO, MS (ENT), MCh (Plastic surgery) ENT and Plastic surgeon

sinusandnose35@gmail.com, sandnhospital@gmail.com, thulasisinusandnose@gmail.com
www.sinusandnose.com

Phone : +91-44-24984474
+91-44-24986886
+91-44-24986887
+91-44-24660948
Mobile: +91-9176330054

**எண்டோஸ்கோப் அறுவை சிகிச்சை முறையில் இதனை மூக்கு வழியாக சரிசெய்து கண்களை மூட வைக்க முடியும்.**



இந்த நிலையை தவிர்க்க (ORBITAL DECOMPRESSION) அதாவது கண்களுக்குள் ஏற்படும் அழுத்தத்தையும் இந்த எண்டோஸ்கோப் அறுவை சிகிச்சை மூலம் மிக எளிதாக தளர்த்தி விட முடியும். TRANSNASAL ENDOSCOPIC ORBITAL DECOMPRESSION இந்த கண்களை வெளியே தள்ளும் கோளாறை நிவர்த்தி செய்வதில் முந்திய உத்திகளை விட மிக எளிமையானதும், பயனுள்ளதும் ஆகும்.

இவை எல்லாவற்றையும்விட முக்கியமான பயன் வேறு ஒன்று உள்ளது. ஸ்கூட்டர், பைக்குகளில் போகும்போது ஏற்படும் விபத்துக்களில் முகத்தில் அடிபடும்போது, பெரிய காயம் ஏதும் இல்லாமல் இருக்கும் ஆனால் திடிரென கண் பார்வை இழக்க நேரிடும். கண்ணில் இருந்து மூளைக்கு செல்லும் ஆப்டிக் நரம்புதான் பார்வையை தீர்மானிக்கிறது. ஒரு எலும்புக்கூடு வழியே செல்லும் இந்த நரம்பு நெற்றியில் அடிபடும்போது இந்த எலும்புக்கூடு உடைந்து அழுத்தத்தைக் கொடுப்பதால் பாதிக்கப்பட்டு பார்வையை இழக்க நேரிடுகிறது இதனையும் எண்டோஸ்கோப் மூலம் கண்டறிந்து எலும்பு அழுத்தத்தை அகற்றி விடுவதால் நரம்பு சரியான நிலையில் மீண்டும் செயல்படத் தொடங்கி பார்வை இழப்பு அபாயம் விலகுகிறது. ஆனால் இதற்கான சிகிச்சையை அடிபட்ட 48 மணி நேரத்திற்குள் வந்து மேற்கொண்டால் பார்வை பூரணமாகத் திரும்பி விடும்.

இந்த எண்டோஸ்கோப் அறுவை சிகிச்சையை செய்து கொள்ள ஒரு நாள் மட்டும் மருத்துவமனையில் தங்கி இருந்தால் போதும். மேலும் முகத்தில் காயம் ஏற்படாமல் மூக்கு துவாரம் வழியாக செய்யப்படுகிறது. அதனால் இந்த நவீன சிகிச்சை அனைவரின் வரவேற்பை பெற்றுள்ளது. இரத்த இழப்பும் காயங்களையும் ஆற்ற வேண்டிய தேவையும் கூட எண்டோஸ்கோபியில் இல்லை. சிகிச்சை முடிந்து வீடு திரும்பி இரண்டு நாள் ஒய்வு எடுத்தால் போதும்.

பழமை ஒழிந்து புதுமை புகும் இந்த 21ம் நூற்றாண்டில் இந்த எண்டோஸ்கோப் சிகிச்சை மூக்கு சம்பந்தப்பட்ட நோய்கள் மட்டுமில்லாமல் கண், மூளை சம்பந்தப்பட்ட நோய்களையும் குணப்படுத்தும் ஒரு சிறந்த வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. மேலும் நோயாளிகளுக்கு நம்பிக்கையூட்டி பூரணமாக நோயிலிருந்து விடுபடும் திருப்தியையும் அளிக்கிறது.

2018ம் ஆண்டு பிப்ரவரி மாதம், Medtronic கம்பெனியின் Fusion என்ற கணினியின் துணையோடு செய்யப்படும் அறுவை சிகிச்சை இயந்திரம் வாங்கப்பட்டது. இதன் துணை கொண்டு செய்யப்படும் அறுவை சிகிச்சை துல்லியமாகவும், சிறப்பாகவும் அமைவதால் முக்கிலும், சைனஸிலும் ஏற்படும் கட்டிகளை முழுமையாகவும், சிக்கல்கள் இல்லாமலும் அகற்ற முடிகிறது. இது எங்கள் மருத்துவமனையின் புதிய கருவி, நோயாளிகளின் நலனுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இதனைப்பற்றி மேலும் விவரங்கள் அறிய Go to Fusion Compact Navigation System.

#35A, Santhome High Road,
Santhome, Chennai-600004,
Tamil Nadu, India.

**Dr. P. துளசி தாஸ்**
MBBS DLO, MS (ENT), MCh (Plastic surgery) ENT and Plastic surgeon

sinusandnose35@gmail.com, sandnhospital@gmail.com, thulasisinusandnose@gmail.com
www.sinusandnose.com